யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூபா 1/- மட்டுமே
சுப்ப கனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 20 ஐப்பசி 24 ஜுல்ஹஜ் 8 இதழ்: 270
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 10-11-78

முக்கிய அறிவித்தல்
இலங்கைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் படிப்புகள் தொடர்பாக மாணவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.
External Studies
Organization
148/1 Stanley Road
T'phone 7715 Jaffna
0762

# சிறிமாவை விசாரிக்க ஜனதிபதி

# ஆணைக்குழுவுக்கு அதிகாரமில்லை!

## மேன்முறையீடு நீதிமன்றம் தீர்ப்பு!

### செலவு தொகை ரூபா 1,500 வழங்கவும் உத்தரவு

(கொழும்பு)

கடந்த ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள், தவறுகள் குறித்து முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை விசாரிக்க விசேட ஜனதிபதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று தீர்ப்பு வழங்கியுள்ளது.

தீர்ப்பு அறிவிக்கப்பட்டதும் இத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ய அவகாசம் அளிக்குமாறு சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

#### குடியுரிமை ரத்துக்கும் அதிகாரமில்லை

திருமதி பண்டாரநாயக்காவை குற்றவாளியாகக்காணுமிடத்து அவரது குடியுரிமையை ரத்துச் செய்யுமாறு சிபார்சு செய்யவும் ஜனதி ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

#### வழக்குச்செலவாக 1,500 ரூபா

விசேட ஜனதிபதி ஆணைக்குழுவுக்கு எதிராக திருமதி பண்டாரநாயக்கா தாக்கல் செய்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதியரசர்கள் வழக்குச்செலவாகத் திருமதி பண்டாரநாயக்காவுக்கு 1,500 ரூபாவை வழங்குமாறும் உத்தரவிட்டனர்.

நீதியரசர்கள் திரு. டபிள்யு. விமலரத்ன (தலைவர்) திரு. ஏ. வைத்திலிங்கம், திரு. பேர்சி கொலின்தோமே ஆகியவர்கள் இம்மனுவை விசாரித்தனர்.

நீதியரசர் திரு. விமலரத்தின தீர்ப்பை அறிவித்ததும், இத்தீர்ப்பை எதிர்த்து உயர் நீதிமன்றதிற்கு மேன்முறையீடு செய்ய அவகாசம் அளிக்குமாறு கோரும் மனு ஒன்றை சட்டமா அதிபர் திரு சிவாபசுபதி சமர்ப்பித்தார்.

உயர் நீதிமன்ற மேன்முறையீட்டுத் தீர்ப்பு வெளிவரும் வரை ஆணைக்குழுவுக்கு தடை உத்தரவை தடை உத்தரவை இடைநிறுத்தி வைக்குமாறு கோரும் மனு ஒன்றையும் திரு சிவா பசுபதி தாக்கல் செய்தார்.

#### இன்று காலை தீர்ப்பு

இரு மனுக்களையும் ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் இம்மனுக்களை ஆராய்ந்து இன்று காலை தீர்ப்பு வழங்கப்படும் என அறிவித்தனர். (இ)

பனம் பொருள் அபிவிருத்திச்சபை

## நாளை திறப்பு விழா

### அமைச்சர் ஜெயவர்த்தன காலையில் வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வீடமைப்புத் திணைக்களக் கட்டடத்தில் அமைந்துள்ள பனம்பொருள் அபிவிருத்திச்சபையின் தலைமை அலுவலகத்தை நாளைக் காலை 9 மணிக்கு தோட்டக் கைத்தொழில் அமைச்சர் திரு. எம். டி. எச் ஜெயவர்த்தன திறந்துவைப்பார்.

அமைச்சர், நாளை அதிகாலை யாழ்ப்பாணம் ரயில்நிலையம் வந்துசேருவார். ரயில் நிலையத்தில் அமைச்சரை அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ, பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தா மற்றும் சபை உறுப்பினர்கள், வடபகுதி ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர்கள், ஆதரவாளர்கள் வரவேற்பார்கள். அமைச்சர் அங்கிருந்து யாழ்ப்பாணம் கிங்ஸ் ஹவுஸுக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

நாளை முற்பகல் 11 மணிக்கு பனம்பொருள் அபிவிருத்தி சம்பந்தமான ஆலோசனை மகாநாடொன்று யாழ். அரசாங்கச் செயலகத்தில் நடைபெறும். இதில் யாழ்ப்பாண மாவட்ட எம்.பி.க்கள் கலந்து கொள்வார்கள்.

நாளை பிற்பகல் 2 மணிக்கு ஒட்டுமடத்திலுள்ள பனங்கட்டித் தொழிற்சாலையை அமைச்சர் பார்வையிடுவார்.

இதன்பின், சங்கானையில் போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கு அமைச்சர் விஜயஞ்செய்வார்.

அன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திலிருந்து ரயில் மூலம் அமைச்சர் கொழும்பு திரும்புவார். (க)

நேற்று நாடுதிரும்பிய

## ஜனதிபதி ஜே. ஆருக்கு குதூகல வரவேற்பு

(கொழும்பு)

இந்தியாவிலும் (நேபாளத்திலும் 5 நாட்கள் பிரயாணம் மேற்கொண்டபின்னர் நேற்று பிற்பகல் கொழும்பு திரும்பிய ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு குதூகல வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமானநிலையத்தில் ஜனதிபதியை பிரதமமந்திரி திரு ஆர். பிரேமதாசா, ஏனைய அமைச்சர்களும் அதிகாரிகளும் ஜனதிபதியை வரசவற்கறனர். முப்படைத் தளபதிளும் பொலிஸ் மாஅதிபரும் வந்திருந்தனர்.

ஜனதிபதி இல்லம் திரும்புகையில் வழிநெடுகிலும் தேசியக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. ஏராளமான மக்கள் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

#### சென்னையில் வழியனுப்பு

நேற்று இலங்கை ஜனதிபதி தமது இந்திய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புகையில் தமிழ்நாடு கவர்னர் திரு. பிரபுதாத் பட்வாரி அன்புடன் வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாடு அரசினதும் மக்களினதும் சார்பில் தஞ்சாவூர் தட்டு ஒன்றை இலங்கை ஜனதிபதிக்கு தமிழ்நாடு பதில்முதலமைச்சர் திரு. மனோகரன் அன்பளிப்பு செய்தார்.

(6ம் பக்கம் பார்க்க]

## துப்பாக்கிமுனையில் ரூ.28,500கொள்ளை

(எம்பிலிப்பிட்டிய)

எம்பிலிப்பிட்டிய பொலிஸ் பகுதியில் துப்பாக்கிமுனையில் பணம் உட்பட 28,500 ரூபா பெறுமதிமிக்க பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

வீட்டுக்காரர் உறக்கத்திலிருக்கையில் வீட்டிற்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டி அவரை துப்பாக்கி முனையில் மிரட்டி இக்கொள்ளையை நடத்தியதாம். (உ)

## கிராமப்புற பஸ்சேவைகள் தனியாரிடம் கொடுக்கப்படும்

(கொழும்பு)

கிராமப்புறங்களில் பஸ் சேவைகளை நடத்துவதற்கு தனியார் நிறுவனங்களுக்கு அனுமதிவழங்கப்படும் என்று பிரதி போக்குவரத்து அமைச்சர் நேற்று மாலை பத்திரிகை நிருபர்கள் மாநாட்டில் தெரிவித்தார்.

கிராமப்புற பஸ் போக்குவரத்துக்கள் டெண்டர் மூலம் தனியார்துறையிடம் கையளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1500 புதிய பஸ்கள் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படவிருப்பதாகவும் பஸ் பற்றாக்குறையினால் பஸ் சேவை சீராக இல்லையென்பதை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (ம)

முக்கிய அறிவித்தல்
JAFFNA LAW ACADEMY
லண்டன் தபாற்கல்வி நிறுவனங்களின் ஆலோசனையுடனும், அனுசரணையுடனும் தமிழ்பேசும் மக்களுக்கு முதன்முதலாக யாழ் நகரிலிருந்து தபால் மூலம் ஆங்கிலக் கல்வி ஆரம்பமாகின்றது
இல்லத்தரசிகள், தொழிலாளர், விவசாயிகள், வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், மாணவமாணவிகள் எவரும் வயது வித்தியாசமின்றி இல்லத்திலிருந்தவாறே ஆங்கிலம் கற்க அரியதொரு வாய்ப்பு.
ஆங்கிலம் கற்க முடியவில்லை என்ற கவலையை விடுத்து எம்முடன் தபால் மூலம் உடனே தொடர்பு கொள்ளவும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தபால் மூலம் ஆங்கிலம்'' எனகுறிப்பிடுதல் வேண்டும்,
பதிவாளர்.
யாழ். சட்டக் கல்வி நிலையம்,
'தையல்முத்து மாளிகை',
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தினசரி ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி (Spoken English) வகுப்புகளும் G. C E. (O,L) ஆங்கில பாடமும் பிரபல ஆங்கில ஆசிரியரால் நடாத்தப்படும்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

8 ஸ்ரீ தொடர்பு இலக்கம் கொண்ட VESPA 150c c. SUPER ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு முகவரி மா. திருவாசகர் 'விமல மலர்' வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. 0750

நீமியா பசளை: மண்ணை வளப்படுத்தி அதிக விளைச்சலைப் பெற நீமியா பசளையை வாங்கி உபயோகியுங்கள். கரும்பு, எலுமிச்சை, முந்திரிகை, வாழை, நெல் ஆகியவற்றிற்குச் சிறந்தது. விவசாயிகளின் நன்மை கருதி 50 இருத்தல் கொண்ட பைகளில் விற்பனையாகிக்கொண்டிருக்கிறது. மில்க்வைற்- யாழ்ப்பாணம். 0753

### தேவை

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள நெசவுநிலையம் ஒன்றில் வேலைசெய்வதற்குஇரண்டு வருட அனுபவமுள்ள பெண்களும், வேலை பழகும் பெண்களும் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். இ. நடராசா, சுதுமலை தெற்கு. ஆனைக்கோட்டை. 0742

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலுள்ள கண்ணாடித் தொழிற்சாலைக்கு 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் வேலை பழகுவதற்கு உடனடியாகத் தேவை. வேலை பழகும் பொழுது சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். 0738

### காணவில்லை

5-11-78 ஞாயிறு காலை 9-30இல் இருந்து 14 வயதுள்ள உருவத்தில் மிகச் சிறிய வனை அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணித்தான் வீட்டிலிருந்து காணவில்லை. பெயர் கணேசன் அல்லது முத்து. உயரம் 3' 9'', வலக்கண் இமை ஈற்றில் 1/2'' நீளமுள்ள வடு, தமிழிலும் சிங்களத்திலும் பாடுவான். தன் பெயரை மாற்றி மாற்றிச் சொல்லும் சுபாவம். அணிந்திருந்தது சிவப்பு வெள்ளை கலந்த சித்தைச் சாரமும், நீலமும் வெள்ளையும் கலந்த கை நீட்டு மேல் சட்டையும். இவனைப் பற்றிய தகவலோ அல்லது இவனையோ தருவோருக்குத் தகுந்த சன்மானம் கொடுப்போம். ஆ. தம்பிராசா, பெருமாக்கடவை, அளவெட்டி தெற்கு. 0751

### உடுப்பிட்டி
### ப. நோ. கூ. சங்கம்
### விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 18-11-78க்கு முன்னர் ரூபா 250/- மேற்படி சங்கத்தில் கட்டி கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும். கேள்விப் பத்திரங்கள் யாவும் 30-11-78 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பொதுமுகாமையாளர், உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம், வல்வெட்டித்துறை, என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கம்,
வல்வெட்டித்துறை. 0754

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# யாழ். மாநகரசபைத் தேர்தல்: ஐ. தே. கட்சி போட்டியிடும்

(யாழ்ப்பாணம்)

விரைவில் நடைபெறவிருக்கும் யாழ். மாநகர சபைத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியும் தனது அபேட்சகர்களை நிறுத்தவுள்ளது.

இந்த விபரத்தை வடபகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த நீதிஅமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதி ஐ. தே. க. ஆதரவாளர்களைச் சந்தித்து உரையாடியபோது தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது 23வட்டாரங்களுக்குரிய கட்சி அமைப்பாளர்களையும் நியமித்துச் சென்றுள்ளார், இதன் அடிப்படையில் 21ம் வட்டாரத்தைச்சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் கூடி ஐ. தே. க, வட்டாரக்கிளை யொன்றை அமைத்தார்கள்.

இக்கிளையின் தேர்வுக்குழு 14ந் திகதிகூடி வேட்பாளர் ஒருவரைதெரிவுசெய்யும். சில வட்டாரங்களில் வேட்பாளர் தெரிவு விரைவில் நடைபெற்றுள்ளது.


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்
## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் விடோ படமாளிகைக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள ஐந்து கடைகளையும் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்குமுத்திரையிட்ட கேள்விகள் 22-11-78 புதன்கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். 21-11-78 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரையும் தேவையான பண வைப்பைச் செலுத்தியதின் பேரில் மாநகர சபையால் வழங்கப்படும் கேள்விப்படிவத்தில் கேள்விகள் சமாப்பிக்கப்படவேண்டும்

மேற்கொண்டு விபரங்களையும், நிபந்தனைகளையும் அலுவலக நேரத்தில் மாநகரசபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
7-11-78. 0756


## அமெரிக்கா பயணமானர்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கலாவல்லி ஆறுமுகதாசன் அமெரிக்க நாட்டிலுள்ளபுளோரிடா நகரில் நிறுவப்பட்டுள்ள குருமகரிஷி சங்கத்தின் வருடாந்த வைபவத்தில் கலந்து கொள்ளும் பொருட்டு கடந்த வாரம் அமெரிக்கா பயணமானர்.

குருமகரிஷி சங்கத்தினரின் அழைப்பின் பேரில் அமெரிக்கா சென்றுள்ள திருமதி கலாவல்லி ஆறுமுகநாதன், ஒரு மாத காலம்வரை தங்கியிருந்து குருமகாரிஷி சங்கத்தின் பல்வேறு கிளைகளுக்குச் சென்று அவற்றின் செயற்பாடுகளை நேரில் பார்வையிடுவார்.

## கரடிப்போக்கில் சனசமூகநிலையம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியில் புதிய சனசமூக நிலையம் ஒன்று திறந்துவைக்கப்படும்.

புனித இயூஜின் என்னும் பெயருடைய இச்சனசமூக நிலையத்தை டாக்டர் எம். ஜி தில்லைநாயகம் திறந்துவைத்துப் பேசுகையில் இதுபோன்ற பின் தங்கிய நிலையிலுள்ள இடங்களில் இந்நிலையங்களால் அளப்பரிய சேவை செய்ய முடியும் என்றும் அதற்கு இளைஞர்கள் அனைவரும் அயராது உழைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

நிலையத் தலைவர் எம். ஜெயபாலன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழா நிகழ்ச்சியில் செயலாளர் எஸ். ஜோண் நன்றியுரை வழங்கினர். (கம்பளை நிருபர்)


## யாழ்ப்பாண மாநகர சபை
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் அமைப்பு வேலைகளுக்கு 22-11-78-ந் திகதி நண்பகல் 12 மணிவரை யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளரால் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | முற்றவெளி மீன்சந்தை | — மலசுடம் |
| 2. | நரிக்குண்டு | — கிணறு |
| 3. | மின்சாரநிலையம் | — துவிச்சக்கரவண்டி பாதுகாப்புநிலையம் |
| 4. | இராசாவின் தோட்ட வீதி | — அணைச்சுவர் |
| 5. | இராஜசிங்கம் வீதி — கடற்கரை வீதி | — அணைச்சுவர் |
| 6. | தாராக்குளம் | — வீடமைப்புத் திட்டம் |
| 7. | புல்லுக்குளம் | — அணைச்சுவரும் வடிகாலும் |
| 8. | குருநகர் தண்ணீர்த்தாங்கி | — மதில்சுவர் |
| 9. | நாவாந்துறை கடற்கரை வீதி | — வடிகால் |
| 10. | செங்குந்தா சந்தை | — மண்டபம் |

கேள்விப்பத்திரங்கள் யாழ். மாநகரசபையுடனே அன்றி வேறு அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களுடனே ரூபா 50,000/-க்கு மேல் பதிவு செய்யப்பெற்ற ஒப்பந்தகாரர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஒவ்வொரு கேள்விக்கும் வைப்புப் பணமாக ரூபா 100/-ம், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 25/-ம் செலுத்தியதின் பேரில் 21-11-78 நண்பகல் 12-00 மணி வரை யாழ்ப்பாண மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்கள் மீதே கேள்விகள் இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்

மேலதிக விபரங்களை மாநகரசபை மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகரசபை.

வேலைப்பகுதி,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்,
8-11-78. 0752


# 'குறுகிய காலத்தில் சிறந்த முன்னேற்றம்'
## பாடசாலை பரிசளிப்பு விழாவில் எம். பி. பாராட்டு

(யாழ்ப்பாணம்)

'மிகக் குறுகிய காலத்தில் பல முன்னேற்றங்களை இப் பாடசாலை அடைந்துள்ளது. பகிரங்கப் பரீட்சைகளில் திறமையான சித்திகள், சமய பாடப் பரீட்சையில் மிகச் சிறந்த பெறுபேறுகள், சமூக விடங்களில் போதிய உற்சாகம், சமூகக் குறைபாட்டு வாரத்தையொட்டி நடைபெற்ற நாடகப் போட்டியில் பரிசு ஆகிய சாதனைகளுக்கு பாடசாலை அதிபரும் ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருங்கிணைந்து செயலாற்றியமையே காரணமாகும். அதிபரின் விடாமுயற்சி நிர்வாகத் திறமை என்பன பாடசாலை மேலும் வளர்ச்சிபெற உறுதுணை புரியும் இப்பாடசாலைக்கு என்னலான சகல உதவிகளையும் பெற்றுத்தருவேன். இன்னும் ஒருமாத காலத்தில் பாடசாலைக்கு மின்சாரம் கிடைப்பதற்கு ஒழுங்குகள் செய்துள்ளேன்' என்று யாழ்ப்பாணம் கொழும்புத்துறை துரையப்பா மகா வித்தியாலய கலைவிழாவிலும் பரிசளிப்பு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றிய யாழ். எம். பி. திரு.வெ. யோகேஸ்வரன் குறிப்பிட்டார்.

மேற்படி விழாவிற்கு யாழ்ப்பாணப் பிரதம கல்வி அதிகாரி திரு. சி. பொ. சிவபாதம் தலைமை தாங்கினர். 'அவர் தமது தலைமை உரையில் மிகக் குறுகிய காலத்தில் பாடசாலை அதிசயிக்கத் தக்க சாதனைகள் புரிந்தமைபாராட்டத்தக்கதென்றார். அதிபரின் நிர்வாகத்திறமை விடாமுயற்சி என்பன தம்மை மகிழ்விப்பதாகத் தெரிவித்தார். பாடசாலை மாணவர்கள் கல்வி கற்பது மாத்திரமல்ல ஒழுக்கத்தைப் பேணுவதற்கும்பாடசாலையே வழிகாட்ட வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

மங்கள விளக்கை ஏற்றி வைத்த யாழ். வட்டாரக் கல்வியதிகாரி திரு. சோ. மகேஸ்வர ஐயர் பாடசாலை வளர்ச்சியையும், மாணவர்களின் ஆற்றல் திறனையும் பாராட்டியதுடன் பரிசில்கள் வழங்குவதன் மூலம் மாணவர் உற்சாகம் பெருகும் எனவும் கூறினர்.

சிறப்புச் சொற்பொழிவாளராகக் கலந்து கொண்ட சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆலயங்களுக்கும் வித்தியாலயங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சமயமும் கல்வியும் ஒன்றையொன்றி பின்னிப்பிணைந்தே வளர்ச்சியடைகின்றன. இவ்வித்தியாலயமும் விநாயகர் ஆலயச் சூழலில் அமைந்து சைவச் சூழலில் சிறந்த சாதனைகள் புரிந்து வருவது பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்டார். மாணவர் தெய்வம், குரு, பெற்றோர் ஆகியோரை மதித்துப் பணிந்து நடக்க இளமையிலேயே கற்றுக் கொள்ள வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

வித்தியாலய அதிபர் திரு. இரா செல்வராசா வித்தியாலய அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசினர். பரிசு பெற்ற மாணவர்களுக்கு யாழ். எம். பி. யின் பாரியார் பரிசில்களை வழங்கினர். இவ்வைபவத்தில் பிரம்மஸ்ரீ க. மு. ஜெகநாதக் குருக்களின் சேவையைப் பாராட்டி அன்னருக்கு யாழ்ப்பாணம் எம் பி, யால் பொன்னடை போர்த்தப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் சில நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 24-ந் திகதி
வெள்ளிக்கிழமை
(10-11-78)

**மேடம்:-** பேச்சு வன்மையால் பெரும் புகழ் அடைவர், பெரிய இடத்துச் சாவகாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும், வரவிலும் உயர்வு உண்டு.

**இடபம்:-** குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும், பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதங்கள் தோன்றக்கூடும், அமைதியுடன் இருக்கவும்.

**மிதுனம்:-** தாய்வழியால் பெருமைகள் சேரும், எதிரிகள்கூட உங்களை வரவேற்பார்கள், மருத்துவத் துறையில் ஈடுபடுவோருக்கு இன்று மகத்தான தினம்.

**கடகம்:-** பணவிவகாரங்கள் பகிழ்ச்சியை அளிக்கும், புத்திரர்களால் மகிழ்ச்சிக்கிடமுண்டு, சிறப்பான தினம்.

**சிங்கம்:-** இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கிடமுண்டு,காரியத்தில் கண்வைக்கவும்.

**கன்னி:-** களஸ்திர வழியால் நன்மைகள் வந்து சேரும், வாழ்க்கையிலும் நல்ல திருப்பம் ஏற்படும், மன நிறைவுக்கும் இடமுண்டு.

**துலாம்:** கொடுக்கல் வாங்கல்மூலம் அபிப்பிராய மோதல்கள் ஏற்படும், கடன் தொல்லைகள் அதிகரிக்கும், உடல்நலமும் பாதிக்கப்படலாம், மௌனம் நன்று.

**விருச்சிகம்:-** புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள், அரசியல் வாதிகளுக்கும் நல்ல ஆதாயம் கிடைக்கும், எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள், பிதாவழி ஆதரவு கிடைக்கும்.

**தனுசு:-** இதயப் படுதாவில் இன்பத்தின் கூற்று, தொழில் துறையில் புதிய சந்திப்புகளுக்கு இடமுண்டு, இடமாற்றத்திற்கும் இடமுண்டு.

**மகரம்:-** பொருள் வரவு திருப்திகரமாக இருக்கும், பெரியோர் ஆதரவும் கிடைக்கும், வியாபாரத் துறையிலும் விருத்தியுண்டு.

**கும்பம்:-** பயை நினைவுகள் உங்களைக் கவலையில் ஆழ்த்தும், நம்பிக்கையின் மூலம் பொருள் விரயத்திற்கு இடமுண்டு, நிதானம் வேண்டும்.

**மீனம்:-** ஆசை அலைகளால் அவப்பெயருக்கு இடமுண்டு, குறுக்கு வழியில் இறங்க வேண்டாம், வீட்டிலும் சிறு பிணி தோன்றக்கூடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கண்காட்சி

(கம்பளை)

கண்டி தர்மராஜா கல்லூரியில் முத்திரைக்கண்காட்சியொன்று ஆறு தினங்கள் வரை நடைபெற்றது. தினமும் படக்காட்சிகள் விரிவுரைகள் பொழுது போக்காக முத்திரை சேகரித்தலில் பயிற்சி ஆகியனவும் நடைபெற்றன.

முதல் நாள் கண்காட்சியை தபால் தந்தி அமைச்சர் திரு. டி பி விஜேதுங்க திறந்து வைத்தார்.

The Eelanaadu

## இந்திராவின் வெற்றி

முன்னாள் இந்தியப்பிரதமமந்திரி திருமதி இந்திரா காந்தி கர்னாடகத்தில் சிக்மகளூர் தொகுதி இடைத் தேர்தலில் வெற்றிவாகை சூடியுள்ளார்

கடத்த பொதுத்தேர்தலில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் ராய்பரேலி தொகுதியில்போட்டியிட்டு திருமதி காந்தி தோற்றது மாத்திரமன்றி பதவியிலிருந்த அவரது காங்கிரஸ் கட்சியும் படுதோல்விகண்டது

பலகட்சி கூட்டுஅமைப்பான ஜனதாகட்சி அமோக வெற்றியீட்டி சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணின் ஆசியுடன் பதவிக்கு வந்தது.

பதவியிலிருந்தபோது அவசரகாலநிலைமையைப் பிரகடனம் செய்ததும், அதனால் ஏற்பட்ட கெடுபிடிகளும், திரு. ஜெயப்பிரகாஷ்நாராயண், மொரார்ஜி தேசாய் போன்ற தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டதும். மகன் சஞ்சைகாந்தியின் நடவடிக்கைகளும், திருமதி காந்தியினதும், அவரது கட்சியினதும் தோல்விக்குக் காரணமாக அமைந்தன.

தேர்தலின்பின் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் மாற்றம் ஏற்பட்டதுடன் இந்திரா ஆதரவாளர்கள் ஒருபுறமும் அவருக்கு எதிரானவர்கள் மறுபுறமுமாகப் பிரிந்து கட்சிபிளவுயட்டது.

பெரும் ஆரவாரத்துடன் பதவிக்குவந்த ஜனதா கட்சி அரிய பெரிய சாதனைகளைப் புரிந்து இந்திராகாந்தி மீண்டும் அரசியலில்தலையெடுக்க முடியாமல் செய்துவிடப் போகிறது என்று பலரும் எதிர்பார்த்தார்கள், ஆனால் கட்சிக்குள் உட்பூசல்கள்ஏற்பட்டு தலைவர்களை ஒருவரை ஒருவர் பகிரங்கமாகக் கண்டிக்கும் பரிதாபநிலை தலையெடுத்தது

தலைவர்கள் அனைவருமே திருமதி காந்தியைக் குறை கூறுவதிலும், அவர்மீதுநடவடிக்கை எடுப்பது பற்றியும் அதிகநேரத்தைச் செலவிட்டுவந்தனர்.

திருமதிகாந்தி அமுல் நடத்திய அவசரகால நிலைமை பற்றியும் அப்போது இடம்பெற்ற சம்பவங்கள் பற்றியும் விசாரிக்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அந்த விசாரணைகள் மக்கள் தொடர்பு சாதனங்கள்மூலம் விரிவானமுறையில் விளம்பரப்படுத்தப்பட்டன. இந்தவிசாரணைகளை வைத்து திருமதி காந்தி மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில் அவசரம் காட்டப்படவில்லையென்பதன் காரணமாகவே ஜனதாதலைவர்களுக்கிடையில் கருத்து மோதல்கள் வலுவடைந்தன

இந்த நிலைமையில்தான் திருமதி காந்தி வடக்கிலிருந்து தெற்கேவந்து கர்னாடக மாநிலத்தில் இடைத்தேர்தலில் போட்டியிட்டார்.

ஜனதா கட்சிசார்பில் யாரைப்போட்டியிட வைப்பது என்பதிலேயே தகராறு ஏற்பட்டது. கடைசியில் முன்னைநாள்கர்னாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டார்.

மத்திய தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தலைமையில் ஜனதாவின் பிரச்சார யந்திரம் முடுக்கிவிடப்பட்டது.

என்றாலும் சிக்மகளூர் மக்கள் 77333 அதிகப்படியான வாக்குகளைவழங்கி திருமதி காந்திக்கு வெற்றியைத்தேடிக் கொடுத்திருக்கிறார்கள்.

வெளியார் ஆக்கிரமிப்புப் போன்ற நெருக்கடியான சமயங்களில் எல்லாம் தலைமைப்பொறுப்பை உறுதியுடனும் துணிச்சலுடனும் நிர்வகித்து இந்தியமக்களின் அன்புக்கும், பாராட்டுக்கும் பாத்திரமாயிருந்த திருமதி காந்தியை ஜனதா தலைவர்கள் விரும்புவது போல் அரசியல் வாழ்விலிருந்தே ஒழித்துக்கட்டிவிட மக்கள் விரும்பவில்லையென்பதையே இத்தேர்தல் முடிவு காட்டுகின்றது.

தம்மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கும் வீண்பழிகளுக்கும் பாராளுமன்றத்திலேயே தக்கபதில் சொல்லவும், தமது நிலையை மக்கள் பிரதிநிதிகள் முன் தெளிவுபடுத்தவும் திருமதி காந்திக்கு மக்கள் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

இதனைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்வதும், அதன் மூலம் இழந்த மதிப்பை நாட்டில் மீண்டும் நிலைநிறுத்திக்கொள்வதும் திருமதி காந்தியின் சாதுர்யத்தைப் பொறுத்தது.

'நிரந்தரமாக உயிர்வாழப்போவதுபோல் படி, நாளைக்கே சாகப்போவது போல் வாழ்.'
-காந்தியடிகள்

# சைவம் வலியுறுத்தும் சமரசம்

பண்ணிசைக் கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

ஓரே உலக உணர்வுடன் தோன்றிய மதங்கள் தங்களுக்குள்ளே போட்டியிட்டு, போராடத் தொடங்கி தத்தம் உயிர்க்கொள்கையான உலக ஒருமைப்பாட்டிற்கே கேடிழைத்து விட்டன என்று கூறலாம். இப் புனிதமான குறிக்கோள் என்றென்றுமே நிறைவேறுதபடி மதங்கள் தடைகளாகிவிட்டன எனவும் கூறலாம். இக் கூற்றிற்கு எமது சைவம் விதிவிலக்காகவே விளங்குகின்றது என்று கூறலாம்.

### சைவசித்தாந்தக் கொள்கை

சைவசித்தாந்த தத்துவக் கொள்கையானது சைவ சமயத்தின் ஒரு பெரிய பழமையான பிரிவாக இருந்தபோதிலும் அதன் ஆதரவாளர்களாலும் ஏனைய பிறநாடுகளில் இல்லாவிட்டாலும் கூட இந்தியாவின் எல்லாப் பகுதிகளில் மட்டுமாவது மக்களிடையில் பரப்பவோ விளம்பரம் செய்யப்படவோ இல்லை எனலாம். சைவர்களில் பெரும்பாலானவர்களின் உள்ளத்தில் சைவசித்தாந்தம் ஒரு வைதிக மதக்கொள்கையன்று என்ற ஒரு தவறான கருத்து இருந்து வருகின்றது. இது ஒரு சிறிதும் அடிப்படையற்ற தவறான கருத்தாகும்.

### வெள்ளி விருந்து

சைவத்தின் இந்த தத்துவக் கொள்கையானது பிறசமயங்களின் எல்லா நற் கூறுகளையும் தழுவி இணைந்து கொண்டுள்ளது. சைவம் குறிக்கும் முழுமுதற் கடவுளாகிய சிவமும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படத் தக்க பொதுமை நல்லியல்புடைய பரம்பொருளாகவும் விளங்குகின்றார்.

சைவத்தில் காணப்படும் கொள்கைகளும், ஒப்புவமைக் கருத்துக்களும் மற்றைய சமயங்களாகிய இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற சமயங்களிலும் காணப்படுகின்றன. சைவம்குறிக்கும் சிவன் ஒளிவடிவினராவர். நாயன்மார்களில் மணிவாசகர் சிவனை ''சோதியே சுடரே'' எனவும் அப்பர் பெருமான் ''தேரவிளக்கெலாம் ஆனாய் நீயே'' எனவும் விளிக்கின்றார்கள். இவற்றிலிருந்து இறைவன் ஒளிவடிவானவன் என்பதும் பெறப்படும். சிவன் என்ற சொல்லிலிருந்தே (Svam) எனும் சொல் உருவாகியிருக்கலாம். சூரியவழிபாடு அனாதியானதாகும். சிவனுக்கு சிவசூரியமூர்த்தி என்ற பெயரும் உண்டு.

இஸ்லாமியர்களின் வேதமாகிய திருக்குரானும் கடவுளைப் பின்வருமாறு கூறுகின்றது ''அல்லா விண்ணுலகத்திற்கும் மண்ணுலகத்திற்கும்ஒரு பெரும் ஒளியாகவிளங்குகின்றார். அது இவ்வுலகங்கள் எல்லாவற்றிற்கும் வெளிச்சம் அளித்துக் கொண்டிருக்கின்றன'' மேலும் கிறிஸ்தவர்களின் இறைத் தூதராகிய இயேசுபிரானும் ''நானே ஒளியாக இருக்கின்றேன் என்று கூறுகின்றார். இவற்றிலிருந்து சமயங்களின் ஒப்புவமை நன்கு விளங்கும் அல்லாமலும் பிரமத்தின் ஒளியினாலேயே இங்கு கீழேயுள்ள எல்லாப் பொருள்களும் ஒளிபெறுகின்றன என்று உபநிடதங்களும் முழங்குகின்றன.

### கூட்டுவழிபாட்டின் சிறப்பும் நோக்கமும்

சைவம் வலிபுறுத்தும் சமரசம் யாவராலும் ஏற்கக்கூடிய தொன்றாக விளங்குகின்றது. சைவத்திலுள்ள கூட்டுவழிபாட்டு முறை மற்றைய சமயங்களிலும் காணப்படுவது இதற்கு எடுத்துக் காட்டாகும். சமயங்கள் வலியுறுத்தும் சன்மார்க்கமெல்லாம். மனிதன் வையத்துள வாழ்வாங்குவாழும்வழிவகையையே வலியுறுத்துகின்றன. சைவத்தின் கூட்டுவழிபாடு பற்றி பாரதியார் பின்வருமாறு கூறுகின்றார். ''ஒன்று கூடிக் கடவுளை வணங்கப் போகுமிடத்து மனிதரின் மனங்கள் ஒருமைப்பட்டுத் தமக்குள் இருக்கும் ஆத்ம ஒருமையை அவர்கள் தெரிந்துகொள்ள இடமுண்டாகுமென்று கருதி முன்னோர்கள் கோயில் வகுத்தார்கள்'' என்று பிற்காலத்தே ஆலய அமைப்பின் நோக்கமே மாறிவிட்டது என்று கூறலாம்.

### சைவ-சித்தாந்த-வேதாந்த சமரசம்

சைவம், சைவ நெறியில் ஒழுகும் எவர்க்கும் எவ்வித கட்டுப்பாடுகளையும் நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. சைவம் ஆன்மாக்கள் முழுமுதற்கடவுளாகிய இறைவனை அடையும் வழிமுறையையே காட்டுகின்றது. இன்று சித்தாந்தம் வேதாந்தம் எனும் பிணக்குகளும், வீண்விதண்டாவாதங்களும் சைவத்தை மக்கள் உணராவழிக்கு இட்டுச் செல்கின்றன என்றும் கூறலாம். சைவ வேதாந்தம்பற்றிக் கூற வந்த சுவாமி விவேகானந்தர் ''வேதாந்தம் தனியொரு மதமன்று'' எனக் கூறுகின்றார். தாயுமானவ சுவாமிகளும் வேதாந்த சித்தாந்த சமரசத்தையே தமது பாடல்களில் வலியுறுத்திக் கூறியிருப்பதும் நோக்கி இன்புறப்பாலதாகும்

சைவத்தில் காலத்துக்குக் காலம் புகுந்த சம்பிரதாயங்களும், சடங்குகளும் மக்கள் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப்பிடித்து நாளடைவில் அவையே மக்கள் வாழ்க்கையிலும் நிலைகொண்டுவிட்டன இதனால் சைவத்தின் உண்மைச் சிறப்பு மக்களால் உணரப்படவில்லை. காலத்திற்குக் காலம் சமயச் சீர்திருத்தவாதிகள் தோன்றி சமய உண்மைகளையும் கோட்பாடுகளையும் வலியுறுத்திக் கூறியபோதும் அவை மக்களால் பின்பற்றப்படவில்லைஎனவும் கூறலாம்.

''எங்கும் பரவிநிற்கும் மெய்ப்பொருளைக் காணவேண்டுமானால் சிருஷ்டியில் அடங்கிய ஈனப் பிராணிகளையும் தன்னுடையதைப் போல பேணும் அன்பைப் பெறவேண்டும். இந்த அன்பைத் தன் உள்ளத்தில் காணும் ஒருவன் தெய்வத்தை நேருக்கு நேர் கண்டவன்'' எனத் தமது சுயசரிதையில் காந்தியடிகள் கூறுகின்றார்கள் இதையே சைவமும் வலியுறுத்துகின்றது.

இதை அன்பே சிவம் எனத் திருமந்திரம் பகருகின்றது. மேலும் அன்பு பெருகும் உள்ளத்தை மேலும் ஒருபடி சென்று உள்ளம் பெருங் கோயில் எனவும் கூறுகின்றது. எனவே சைவம் வலியுறுத்தும் சமரசம் யாவராலும் ஒப்ப முடிந்ததொன்றாக விளங்குகின்றது (வளரும்)

சுதந்திர வர்த்தக வலயத்தில் இந்தியா பங்கு:

# சட்டங்களைத் தளர்த்துமாறு

## இந்தியாவுக்கு ஜே. ஆர். கோரிக்கை

(சென்னை)

**இலங்கையின் சுதந்திர வர்த்தக வலயத்தில் இந்திய தொழில் அதிபர்கள் மூலதனம் செய்ய வாய்ப்பளிக்கும் விதத்தில் இந்திய சட்டங்களை தளர்த்துமாறு இலங்கை ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன இந்திய அரசைக் கேட்டுள்ளார்.**

இத்தகவலை திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவே தமிழ்நாட்டில் தெரிவித்தார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசும்போதே திரு. ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

ஆசியாவில் ஒரு பொதுச் சந்தை உருவாக்கப்படவேண்டும் என்றும் திரு. ஜெயவர்த்தன கூறினார்.

### கவர்னர் விருந்து

திரு. ஜெயவர்த்தன குழுவினருக்கு தமிழ்நாடு கவர்னர் திரு. பிரபுதாஸ் பட்வாரி சென்னை ராஜ்பவனில் விருந்தொன்றை அளித்தார்.

விருந்தின்போது போதிமரத்தடியில் புத்தர்வீற்றிருப்பது போன்ற உருவச்சிலையை திரு. ஜெயவர்த்தனவுக்கும் அன்னை சிவகாமியின் உருவச்சிலையை திருமதி ஜெயவர்த்தனவுக்கும் திரு. பட்வாரி அன்பளிப்புச் செய்தார்.

விருந்தில் கலந்துகொண்ட தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் திரு. ஜெயவர்த்தனவுக்கு சந்தனக் கோல் ஒன்றையும், திருமதி ஜெயவர்த்தனவுக்கு காஞ்சிபுரம்சேலை ஒன்றையும் அன்பளிப்பாக கொடுத்தார். (இ)

## விற்பனை அதிகரிப்பு

(சங்கானை)

சங்கானை ப. நோ. கூ. சங்கம் தீபாவளி வியாபாரத்தை ஏனைய வருடங்களைவிட திறம்பட நடாத்தியுள்ளது.

நிர்வாகத்தார் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக பிறநாட்டுத் பொலியஸ்ரர் துணிகள் சேட்டுக்கள் முதலானவை வரவழைக்கப்பட்டமையும் ஏனைய கடைகளைவிட் மலிவாக விற்பனை செய்தமையுமே இவ்விற்பனை அதிகரிப்புக்காரணமாம்' (அ)

இலங்கை கலாசார பேரவை நடத்தும்

## தமிழ் நாடகப் போட்டி; நாடகப் பெருவிழா

(கொழும்பு)

இலங்கை கலாசாரப் பேரவை 1978ம் ஆண்டுக்கான தமிழ் நாடகப் போட்டியும், தமிழ் நாடகப் பெருவிழாவும் நடாத்தவிருக்கின்றது.

நாடகங்கள் இரு பெரும் பிரிவுகளாக நடாத்தப்படவிருக்கின்றன.

புதிய நாடகங்கள், பாரம்பரிய நாடகங்கள் என இவை இரு பிரிவுகளாக நடைபெறும்.

நாடகப் பெருவிழா தேசிய ரீதியாக நடாத்தப்படும்

சிறந்த பிரதி, சிறந்த தயாரிப்பு சிறந்த நடிகர், சிறந்த நடிகை, சிறந்த இசையமைப்பு, சிறந்த அரங்க நிர்மாணம் என்ற துறைகளுக்குத் தலா 1000 ரூபா பரிசில்கள் வழங்கப்படும் என அறிவிக்கப் பட்டிருக்கிறது.

சகல நாடகங்களுக்கும் மேடையமைப்பும், ஒளி வசதிகளும் கலாசாரப் பேரவையினால் இலவசமாக வழங்கப்படும். நாடகப் போட்டிக்கு விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான இறுதி திகதி டிசம்பர் 20ம் திகதி என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### வருடாந்தக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

அரசாங்க மருந்துக்கலவையாளர்கள் சங்கத்தின் 37வது வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 26-ம் திகதி கொழும்பு வைத்தியக்கல்லூரி சொற்பொழிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் திரு. ரி. பி. விக்கிரமசிங்கா கூட்டத்திற்கு தலைமை வகிப்பார்.

# "மக்களுக்கு கிடைத்த வெற்றி!"

## இந்திரா பெருமிதம்

சிக்மகளூர், நவ. 9

"சிக்கமளூரில் தமக்குக் கிடைத்த வெற்றி, மக்களின் உண்மையான வெற்றியே" என்று திருமதி இந்திரா காந்தி தெரிவித்துள்ளார்.

இந்திரா காங்கிரஸின் கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் மககள் உறுதியான ஆதரவு தந்தனரென்றும், மக்களுக்குத் தொடர்ந்து பணி செய்வதே தமது தலையாய கடனென்றும் திருமதி காந்தி பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பல கொடுமைகளுக்கும், மக்களின் அவஸ்தைகளுக்கும் காரணமாகவிருந்த அவசர கால நிலைமை சரியானதென்று இன்றும் கூறிவரும் திருமதி காந்தியினுலோ, ஜனதாக் கட்சி அரசினுலோ இந்திய மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. ஜனநாயகக் கட்சிகளின் இடதுசாரி அமைப்பு ஒன்றே இப்பிரச்சினைகளைத் தீர்க்கும் என்ருர் அவர். (இ)



### ஈரான் முன்னுள் பிரதமர் கைது

தெஹ்ரான், நவ. 9

ஈரான் முன்னுள் பிரதமர் ஜுைப் குபைதா, நேற்று இராணுவ அரசினுல் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

13 ஆண்டுகளாக ஈரானில் பிரதம மந்திரியாக இருந்த ஜுைப் குபைதா, 15 மாதங்களுக்கு முன்னர் தமது பதவியை ராஜினுமாச்செய்தார்.

ஈரானின் அரச குடும்பத்தின் செல்வம், உடைமைகள் அவர்களுக்குக் கிடைத்த விபரங்களையும் மன்னர் ஷா கோரியுள்ளார்.

ஈரானில் நிரந்தர அமைதியை ஏற்படுத்தவே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக இராணுவ அரசு அறிவித்தது. (இ)

"சிக்மகளூர் இடைத் தேர்தலில்

# இந்திராவின் திறமைதான் வெற்றிக்கு காரணமல்ல!"

## ஜோர்ஜ் பெர்ஞண்டஸ் கருத்து

புதுடில்லி, நவ. 9

"இந்திரா காந்தியின் திறமைதான் சிக்மகளூரில் அவருக்கு வெற்றியைத் தேடித் தந்ததென்று நாம் நம்பவில்லை. கர்நாடக முதல்வர் திரு தேவராஜ் அர்ஸ், சிக்மகளூரில் திருமதி காந்தியின் வெற்றிக்காக உழைத்திருக்கிருர்"

இவ்வாறு மத்திய தொழில் அமைச்சரும் சிக்மகளூர் இடைத்தேர்தலில் ஜனதாக் கட்சிப் பிரசாரப் பணிகளுக்குப் பொறுப்பாக இருந்த திரு. ஜோர்ஜ் பெர்ஞண்டஸ் தெரிவித்துள்ளார்

திருமதி காந்தி சிக்மகளூரில் 18 நாட்கள் தங்கியிருந்து தீவிரப் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தும், குறைந்த விகிதாசார மேலதிக வாக்குகளாலேயே வெற்றிபெற்ருரென்றும் திரு. பெர்ஞண்டஸ் கூறினர்.

ஜனதாக் கட்சியின் சாதனைகளை மக்களுக்கு உரிய முறையில் விபரமாக எடுத்துக்கூறத் தவறியமையே இந்த இடைத் தேர்தலில் ஜனதாக்கட்சி தோல்வி அடைந்ததற்குக் காரணமென்றும் திரு. பெர்ஞண்டஸ் கூறினர். (இ)

மூன்று ஆண்டுகளில்

# 120 லட்சம் வெளிநாட்டவர் சோவியத் யூனியன் விஜயம்

மாஸ்கோ, நவ. 9

கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 90 லட்சம் சோவியத் பிரஜைகள் 135 நாடுகளுக்குப் பிரயாணம் செய்திருக்கிருர்கள். 120 லட்சம் வெளிநாட்டவர்களுக்கு சோவியத் யூனியனில் பிரயாணம் செய்ய பிரவேச விஸாக்கள் வழங்கப்பட்டன.

சோவியத் உள்துறை பிரதி அமைச்சர் போரிஸ் ஷூமிலின் இத்தகவலை இங்கு வெளியிட்டார்.

வெளிநாடுகளுடன் உறவுகள் தொடர்புகள் வைத்துக்கொள்வதில் 5 கோடி பிரஜைகள் சம்பந்தப்பட்டிருப்பதாகவும் இவற்றுடன் தொடர்பாக 50,000 நிகழ்ச்சிகள் பிரதி ஆண்டும் நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

"கடந்த மூன்று ஆண்டு காலத்தில் 10,000 வெளிநாட்டுத் தூதுகோஷ்டிகள் சோவியத் தொழிற்சங்க, விளையாட்டு, வாலிபர் ஸ்தாபனங்களின் அழைப்பின் பேரில் இங்கு விஜயம் செய்தது.

வெளி நாட்டவர்கள் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்ய அனுமதி கோரி மனுச் செய்த 10 நாட்களில் தற்போது விஸா வழங்கப்படுகிறது. மேற்கத்தைய நாடுகள் எடுக்கும் காலத்தைப் பார்க்கிலும் இது குறைவானதாகும். வெளி நாடுகளில் வாழும் குடும்பத்தவர்களுடன் சேர்ந்துவிட விரும்புபவர்களுக்கு தடை ஏதும் இல்லை. உதாரணமாக, இரண்டாம் உலக யுத்தம் முதல் 1978 செப்டம்பர்வரை குடும்பங்களுடன் இணைய விரும்பிய யூதர்கள் 168,000 பேருக்கு இஸ்ரேல் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்துகொண்ட பிரஜைகள் மொத்தம் 10,500 பேருக்கு செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இவர்கள் இன்று 100 நாடுகளில் வாழ்கிருர்கள் என்று பிரதி அமைச்சர் கூறினர்.

# ஹிந்தியை ஏற்காதவரை ஆங்கிலம் இணைப்பு மொழி!

## மொரார்ஜி உறுதி

புதுடில்லி, நவ. 9

ஹிந்தி மொழி உபயோகத்தை மாநிலங்கள் ஏற்றுக்கொள்ளும்வரை அம்மாநிலங்களில் ஆங்கிலம் தொடர்ந்து இணைப்புமொழியாகவே இருக்கும்.

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், சிலாங்கில் இவ்வாறு தெரிவித்தார்.

பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

மாநிலங்களுக்கிடையே உள்ள எல்லைப் பிரச்னை குறித்து ஆராயக் கமிஷன் விசாரணை அவசியமில்லை.

இந்தியா ஒரே நாடு. ஒரு மாநிலத்திலிருந்து மற்றைய மாநிலத்திற்குச் சென்று வாழ்வது ஒருபோதும் ஊடுருவல் ஆகாது என்றும் திரு. தேசாய் கூறினர். (இ)






இனவாத எதிர்ப்பு

# நடவடிக்கை; பிரிட்டிஷ் அரசு நிதி உதவி

லண்டன், நவ. 9

பிரிட்டனில்இனவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு நிதியுதவி அளிக்க, பிரிட்டிஷ் அரசு தீர்மானித்துள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான கண்டனக் கூட்டங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் ஆகிய நடவடிக்கைகளுக்கு 10 ஆயிரம் பவுண் நிதியுதவி அளிக்கப் பிரிட்டிஷ் அரசு தீர்மானித்துள்ளது. (இ

### உ. பி. யில் இந்து-முஸ்லிம் கலவரம்

புதுடில்லி, நவ. 9

உத்தரப்பிரதேச மாநிலத்தின் அலிகார் மாவட்டத்தில் கடந்த 3 நாட்களாக நடைபெற்றுவரும் இந்து-முஸ்லிம் கலவரம் காரணமாக அப்பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

இக்கலவரத்தில் இதுவரை 4 பேர் பலியாகியுள்ளனர். (இ)

### ரூ 3,000 பிணையில் செல்ல உத்தரவு

(புலோலி)

கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்தப்படவேண்டிய 2909 ரூபா 18 சதத்தைச் செலுத்தத் தவறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டவரை பருத்தித்துறை நீதவான் திரு. கே. ஞானச்சந்திரன் 3,000 ரூபா பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த கே. எஸ் மாணிக்கம் என்பவரே கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய பணத்தைக் கட்டத் தவறியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளவராவார். இவ்வழக்கு, கூட்டுறவுத் திணைக்களத்தால் தொடரப்பட்டிருந்தது. (உ)

### மகாவலிக்கு அமெரிக்க உதவி

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாவது கட்ட வேலைகளுக்காக அமெரிக்கா தற்சமயம் வழங்கும் 52 லட்சம் டாலர் உதவியில் ஒரு பகுதியாக 22 லட்சம் டாலர் பெறுமதியான பாரிய உபகரணங்கள் கடந்த செவ்வாயன்று கொழும்பில் கையளிக்கப்பட்டன.

கொழும்புத் துறைமுகத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திஸநாயக்காவிடம் அமெரிக்கத் தூதுவர் திரு. ஹவார்ட் ரிக்கின்ஸ், சர்வதேச அபிவிருத்திக்கான உதவி நிறுவனத் அதிபர் செல்வி. எஸ். ஜே. லிட்டில்பீல்ட் ஆகியோர் பிரஸ்தாப உபகரணங்களைக் கையளித்தனர். (இ)

### இன்று

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் கோவிலில், ஐப்பசிக் கடைசி வெள்ளித் திருவிழாவான இன்றிரவு பண்ணிசைக் கலாநிதி திரு.எஸ்.கே. சிவபாலனின் தேவார இன்னிசைக் கச்சேரி நடைபெறவுள்ளது.

### யாழ். உதைபந்தாட்ட லீக்கின்

# பரிசளிப்பு வைபவ உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக்கினல் விளையாட்டுக் கழகங்களிடையே நடாத்திய வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், 'ஏ' பிரிவில் நாவாந்துறை சென். மேரிஸ் கழகமும், 'பி' பிரிவில் யாழ். முஸ்லீம் கழகமும் தெரிவு செய்யப்பட்டன

மேற்படிக் கழகங்களுக்கு வெற்றிக் கிண்ணங்களைப் பரிசளிக்கும் முகமாக நாளை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இரு கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நாளை நடைபெறவிருக்கும் முதல் ஆட்டத்தில், 'பி' பிரிவில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ் முஸ்லீம் கழகத்துடன் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி கோஷ்டி மோதும்.

இரண்டாவது ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட நாவாந்துறை சென் மேரிஸ் கழகத்துடன் யாழ். மாவட்டத் தலைவர் தெரிவுக் கோஷ்டி மோதும்.

இவ்விரு போட்டிகளுக்கும் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளன உப-தலைவர் திரு வி. கே. ஆறுமுகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். உதைபந்தாட்ட லீக்கினர் மேற்கொண்டு வருகின்றனர்.


தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர், சுஜாதா நடித்த
நீ ஒரு மகராணி
புதிய பிரதி

லிடோ [யாழ் நகர்]
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

கடைசி வாரம்
ராஜா (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாண)
தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். — சரோஜாதேவி நடித்த
திருடாதே [புதிய பிரதி]

மனோகரா [யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
தனிப்பிறவி
(புத்தம் புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்)
போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
பேசும் தெய்வம் (புதிய பிரதி)
Showing Soon "Blood Money"

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 3 காட்சிகள் போன்: 466
3 வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம் நடித்த
அநுராகம்


## முதலிடம்

(புலோலி)

அகில இலங்கை ரீதியில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் நடாத்திய இலக்கியப்போட்டிகளின் கட்டுரைப் போட்டியில் மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையில் உயர்தாவகுப்பில் சித்தியடைந்த மாணவியும் துன்னாலை வடக்கைச்சேர்ந்த வருமான செல்வி சுபதினி செல்வராஜா முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

ஈழத்தின் நவீனகால இலக்கிய வளர்ச்சிகள் என்னும் பொருள்பற்றி எழுதப்பட்ட இக்கட்டுரை முதலாம் இடத்தைப்பெற்றமைக்காக மோட்டார் போக்கு வரத்துத் திணைக்களம் 100 ரூபாவை இவருக்கு பரிசாகவழங்கியுள் கியுள்ளது. (உ)

## அனுதாபம்

(புலோலி)

''தமிழை வளர்ப்பதற்கு அளப்பரிய சேவைபுரிந்தவரும் வடஇலங்கைக்கும் கிழக்கு இலங்கைக்கும் இடையே இலக்கியப் பரிமாற்றங்களை ஏற்படுத்திய வருமானபுலவர் மணி பெரிய தம்பிப்பிள்ளையின் மறைவு தமிழ்உலகிற்கே பேரிழப்பாகும்''

புலவர் மணியின் மறைவு குறித்து வட இலங்கைப பண்பாட்டுக்கழகச் செயலாளர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

### யாழ். உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

# வெளிச்சம் இல்லையாம்; ஸ்கந்தா ஆட மறுத்தது

## யூனியன் முன்னணியில்

(விளையாட்டு நிருபர்)

யாழ். பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முதலாவது பிரிவு அரை இறுதிப் போட்டியில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியை எதிர்த்து ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி வீரர்கள் ஆட்டம் முடிவதற்கு நான்கு நிமிடம் இருந்தபோது வெளிச்சம் போதாது என்று காரணம்கூறி ஆட்டத்தை நிறுத்திக்கொண்டனர்.

நடுவர், அவர்களின் கோரிக்கையை ஏற்க மறுத்து 4 நிமிடங்கள் முடிவடைந்ததும் ஆட்டம் முடிவடைந்ததாக அறிவித்துவிட்டுச் சென்றார்.

அப்போது யூனியன் கல்லூரி 9—0 கோல்களை அடித்திருந்தது.

ஆட்டத்தின் முடிவு பின்னர் அறிவிக்கப்படும் என நடுவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற இப்போட்டியில் யூனியன் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் இன்பவடிவேல் மிகத் திறமையாக விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார் என்பது குறிப்பிடத் தக்கது.

இப்போட்டியைக்காண பெருந்திரளான ரசிகர்கள் வந்திருந்தனர். நடுவராக திரு. ஏ. கமலநாதன் கடமையாற்றினார். [இ]

## நடேஸ்வரா வெற்றி

[மட்டுவில்]

கொட்டும் மழையில் விறுவிறுப்பாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி 2—0 கோல்களால் சாவகச்சேரி இந்துக் கல்லூரியை வென்றது.

யாழ். மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் சாவகச்சேரியில் நடத்திய உதைபந்தாட்டப் போட்டியில், காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி 2ம் பிரிவு வீரர்களும், சாவகச்சேரி இந்துக் கல்லூரி 2ம் பிரிவு வீரர்களும் மோதிக் கொண்டனர்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இந்த உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. மத்தியஸ்தராக திரு. எஸ். ஜெயரத்தினம் கடமையாற்றினார். [இ]

# சாரணியர் இயக்கத்துக்கு கிளிநொச்சி எம்.பி. பாராட்டு

(பரந்தன்)

இவ்வாண்டில் உதயமான 1ம் கிளிநொச்சி சாரணியர் கம்பனியின் வருடாந்த ஒரு நாள் வெளிக்கல வாசத்தை பார்வையிட்ட கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி சிறுர்களின் சிற்றில்களை பாராட்டினார்.

பின்தங்கிய இப்பகுதியில் முதல் தடவையாக சாரணியர் இயக்கத்தை கிளிநொச்சி சென் திரேசா அதிபர் செல்வி ஆர். சோமசுந்தரம் ஆரம்பித்துவைத்தார்.

24 சாரணியர் நான்கு பிரிவாக இரணமடு பூங்கா அருகே சிற்றிலகள் கட்டியும், மதிய போசனம், தேனீர் முதலியனவும் தயார் செய்தனர். மத்தியஸ்தராக ஆசிரியைகள் திருமதி சாமுவேலும், திருமதி வின்சன்ற்றும், திரு. கே. ஆறுமுகமும், சாரணியத் தலைவி செல்வி ராதா சோமசுந்தரத்தின் தலைமையில் கடமையாற்றினர்.

மாணவ பற்றேல் தலைவி செல்வி பத்மினி தாமரை குழுவையும், செல்வி திரேசாவில்லி குழுவையும் திறம்படசெய்து சமபுள்ளிகளால் முதல் இடத்தை தட்டிக்கொண்டனர்.

சாரணிய இயக்கம் இப்பகுதியில் மேலும் விஸ்தரிக்க சாரணிய தலைவி முயற்சிசெய்து வருகிறார்.

## துரித அக்கறை இல்லையாம்

(சங்கானை)

வடபகுதியில் அண்மையில் பெய்த பெருமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தை அகற்ற வீதிகளில் வெட்டப்பட்ட வாய்க்கால்களையும் பாரிய கிடங்குகளையும் இடிந்தபாலங்களையும் செம்மைப்படுத்த நெடுஞ்சாலை அமைச்சுபகுதியினரோ அவ்வப்பகுதி உள்ளூர் ஆட்சி மன்றங்களோ துரித அக்கறை கொள்வதாக தெரியவில்லையாம்.

சிலவீதிகள் இன்னும் திருத்தப்படாமல் இருப்பதால் அவ்வீதிவழியே செல்லும் வாகனங்களுக்கு எவ்வித அறிவித்தலும் வீதியில் இடப்படாமையாலும் அவைகள் அந்த அபாயகரமான கிடங்கு வரை சென்று மீண்டும் பின்னேக்கி செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இரவிலும் அபாயத்தை தெரிவிக்கும் சிவப்பு வெளிச்சம் தொங்கவிடப்படுவதில்லை.

இதனால் கடந்த திங்கட்கிழமை சுடுகாட்டு ஆலடிக் கருகாமையில் மானிப்பாய் வீதியில் சயிக்கிளில் சென்ற இருவரும் பாதசாரி ஒருவரும் வீதிக்கிடங்கில் விழுந்து படுகாயம் அடைந்தனர். (உ)

## இன்று பரிசளிப்பு விழா

(சுழிபுரம்)

வழக்கம்பரை சன சமூக நிலைய பஜனைச் சபையினர், நிலையக்குரல் மூலமாக நடாத்திய கந்தரலங்கார எழுத்துப் போட்டி, கந்தரநுபூதிமனனப் போட்டி, ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்குரிய பரிசளிப்புவிழா இன்று காலை சுழிபுரம் பறுளை முருகமூர்த்தி கோவில் வசந்த மண்டப முன்றலில் நடைபெறும். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசு பரிசுகளை வழங்குவார். இப்போட்டியில் அறுபத்திநாலு பேர் பரிசுபெறவுள்ளனர்.


Rio (Jaffna)
Daily 4 Shows
KILLERS OF KILLIMANJARO
(Mistery-Thrill)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம் ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
4-45, 7-15, 10-00
KARAKATOA EAST OF JAVA


## சைவசமய பாடப்பரீட்சை

(வட்டுக்கோட்டை)

காரைநகர் மணிவாசகர் சபையால் வருடந்தோறும் நடாத்தப்பெற்று வருகின்ற சமயபாடப்பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. பதினொரு பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ள இப்பரீட்சையில் காரைநகரில் உள்ள பதினைந்து பாடசாலைகளில் இருந்து ஆயிரத்து ஐந்நூறு பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

இரண்டாம் வகுப்பில் இருந்து க. பொ. த. (சாதாரண) தரவகுப்பு வரைக்கும் நடைபெறவுள்ள இப்பரீட்சையிற் தோற்றி ஒவ்வொரு வகுப்பிலும் ஆகக்கூடுதலான புள்ளிகளைப்பெறும் முதல் மூன்று மாணவர்களுக்கு சிறந்தபரிசில்கள் வழங்கப்படுவதோடு பரீட்சையில் சித்தி பெறும் சகலமாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் இப்பரிசில்கள் மார்கழித்திருவாதிரை உற்சவத்தின் போது ஈழத்துச்சிதம்பரத்தில் மணிவாசகர் சபையால் நடாத்தப்பெற்று வருகின்ற 24 வது மணிவாசகர் விழாவின் போது வழங்கப்படும். [உ]

## நாளை நடக்கும் பொதுக்கூட்டம்

(புலோலி)

''தமிழர் விடுதலைப் பாதையில் கருத்துக் குவியல்களும், எழுச்சி முரசமும்'' என்ற தலைப்பில் திரு. வை. வீரபத்திரன் தலைமையில் நாளை மாலை புலோலி பெரிய தேவனைத் தாய் சனசமூக நிலைய முன்றலில் பொதுக் கூட்டமொன்று நடைபெறவுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ்கட்சி பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் சுயாட்சிக் கழகத் தலைவர் திரு. வி. நவரத்தினம், மற்றும் திருவாளர்கள் எம். ஸ்ரீகாந்தா, வி. திருவாதவூரன், செ. கோடீஸ்வரன் எஸ். மகேந்திரராஜா, இ. ஆனந்தராஜா ஆகியோரும் உரையாற்றுவார்கள்.

### "சேர் பொன் இராமநாதனுக்குப் பின்னர்

# தமிழினத்துக்காகபாடுபட்ட ஒரே தலைவர் ஜி. ஜி. தான்!"

## நினைவு தினவிழாவில் முன்னாள் நீதவான் நவரத்தினம்

[யாழ்ப்பாணம்]

''அமரர் ஜி. ஜி. பொன்னம் எந்த விஷயத்தையும் துணிந்து "நான்கூறுகிறேன்''என்பார். ஆனால் இன்றைய தலைவர்கள் அவர் கூறுகிறார்; இவர் கூறுகிறார், மக்கள் கூறுகிறார்கள் என்று மழுப்பிவிடுகிறார்கள். இது ஒரு தலைவனுக்குச் சிறந்த தல்ல. சேர் பொன்.இராமநாதனுக்குப்பின் துணிவுடன் தமிழினத்திற்காகப்பாடுபட்ட ஒரேஒருதலைவர் அமரர் ஜி ஜி. பொன்னம்பலம்தான்.''

யாழ்.மத்தியகல்லூரிமண்டபத்தில் நடந்த அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் 77-வது பிறந்ததினவிழாவில் பேசிய முன்னாள் யாழ். நீதவான் கே. வி. நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்

தமிழ்க்காங்கிரஸ் உபதலைவர் திரு எஸ்.ஆர் கனகநாயகம் தலைமையில் நடந்த இவ் விழாவில், அமரர் ஜி. ஜி. யின் உருவப்படத்தை திரு. கே.வி நவரத்தினம் திரைநீக்கம்செய்துவைத்து மாலைசூட்டி அஞ்சலிசெலுத்தினார். ஜி ஜி. காங்கிரஸ் தலைவர் திரு.ஆர். என். சிவப்பிரகாசம், ரோஜா மலர் தூவி அஞ்சலிசெலுத்தினார். ஜி. ஜி. இளைஞர் இயக்கத் தலைவர் திரு ஆர் செல்வகுமார், செயலாளர் திரு. கே. பாலசிங்கம் ஆகியோர் மாலைசூட்டி அஞ்சலிசெலுத்தினார்கள்.

### முதன்முதலில்

திரு கே வி நவரத்தினம் மேலும் கூறியதாவது;

"அமரர் ஜி ஜி பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்டு, தமிழினத்தின் குரலை முதன்முதலில் உலகிற்கு எடுத்துக்காட்டினார். 47ம் ஆண்டில் நான் யூ என் பி.யில் இருந்தபோதுதேர்தலில் அமரர் பொன்னம்பலத்திற்கு எதிராகப்பிரசாரம்செய்தேன். அத்தேர்தலில் அமரர் ஜி.ஜி. அமோகவெற்றி பெற்றார். அதன்பின்தான்அவரைப்பற்றி விளங்கியது.

"சிங்களவர்கள் தமிழினத்தை நசுக்குவார்கள். நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று ஒருமுறை அவர் என்னிடம் கூறினார்.

### அவசரப்பட்டால் வெற்றிகிடைக்காது

''மக்கள் ஆதரவு குறைந்தபோதெல்லாம் அவர் அரசியலைவிட்டு ஓடிவிடவில்லை,தமிழினத்திற்காக முழுமூச்சாகப் பாடுபட்டார். அரசியல் என்பது கேட்பது கிடைப்பதல்ல. அமரர் ஜி. ஜி படிப்படியாக ஏறித்தான் மேல்படிக்குச்சென்றார். முதல்படியிலிருந்து நடுப்படிகளில் ஏறாமல், மேல் படிக்குச் செல்வேன் என்று அவர் என்றும் கூறியதில்லை. இன்றைய தலைவர்கள் கேட்பது கிடைக்கவேண்டும் என்று போராட்டம்நடத்துகிறார்கள். இருநூறு முன்னூறு வருடங்கள் போராடி, புத்திசாலித்தனமாகவே நாம் விடுதலை பெறலாமேயொழிய, அவசரப்பட்டு எந்தவெற்றியையும் காணமுடியாது.

### இரகசியக் கூட்டம் பலன் தராது

''அமரர் ஜி ஜி. எந்தவிஷயத்திற்கும் இரகசியக்கூட்டம் நடத்தியது கிடையாது. மகாத்மாகாந்தி இரகசியக் கூட்டங்கள் நடத்தியது கிடையாது ஜவகர்லால்நேரு இரகசியக்கூட்டம் நடத்தியதுகிடையாது இன்றைய தலைவர்கள் பதவிகள் பெறுவதுபற்றி ஆலோசிப்பதற்கு, பத்திரிகை நிருபர்களை அனுமதிக்காமல் இரகசியக்கூட்டங்கள் நடத்துகிறார்கள். ஆனால் எந்த இலட்சியத்திற்கு நாம் இரகசியக் கூட்டம் நடத்தவேண்டுமோ அதனை பகிரங்கமகா நாடு கூட்டி தீர்மானிக்கிறார்கள். விடுதலை பெறுவதென்பதை பகிரங்கமாக அறிவிக்கலாமா? அதனையல்லவா இரகசியமாக வைத்திருக்கவேண்டும்

### பாராளுமன்றம் எதற்கு?

பாராளுமன்றத்திற்குச் செல்வது எதற்கு? மற்றையோர் தெரிவிக்கும் கருத்தை அறிந்து அவற்றிற்குச் சரியான பதில் கூறுவதற்கே. மற்றையோர் சொல்வதைக் கேளாமல்,பகிஷ்கரித்துவிட்டு எங்கள் கருத்தைச் சொல்வதில் பயனென்ன?'

''நான் அரசியல்வாதியல்ல. இனிமேலும் அரசியலில் ஈடுபடப்போவதயில்லை. நான் தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளனுமல்ல. உண்மைகளைத்தான் இங்கு எடுத்துக்கூறுகிறேன்'' என்றார்.

திரு.எஸ்.ஆர்.கனகநாயகம் கூறியதாவது: ''இத்த நாட்டில் மட்டுமல்ல உலக நாடுகளெங்கும் பெயர் ஓங்கிய அரசியல் தலைவர் அமரர் பொன்னம்பலம், சட்ட அறிஞராகவும், சமயத்தொண்டராகவும் விளங்கினார்.

### இன்றிருந்தால்...

''ஐக்கிய நாடுகள் சபையில் ஆங்கிலேயரே வியக்கும்படி, ஆங்கிலத்தில் உரைநிகழ்த்தினார். தமிழினம் இன்று இக்கட்டான நிலையில் தவிக்கின்றது. அமரர் ஜி. ஜி. இன்று இல்லையே. அவர் இருந்திருந்தால் இந்த அவலநிலை ஏற்பட்டிருக்காதே என்று தமிழ் மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

''அமரர் ஜி .ஜி. அரசியல் ஞானம், சாகசம் தெரிந்தவர். தீர்க்கதரிசி.

''அமரர் ஜி ஜியின் நாமத்தை உச்சரிக்கவே அவரிடம் அரசியல்பாடம் கற்ற தலைவர்கள் இன்று தயங்குகிறார்கள்.

### திட்டங்கள் இல்லை

''சட்டத்தரணி ஏ. அன்ரனி பேசுகையில், தான் தமிழரசுக்கட்சி உறுப்பினராக இருந்து, உரிமைப் போரில் சிறைசென்றதாகவும், தமிழரசுக்கட்சியிடம் திட்டங்கள் எதுவுமில்லை என்பதையறிந்து அதிலிருந்து வெளியேறி அமரர் ஜி ஜியின் பாதையைப் பின்பற்றியதாகவும் கூறினார்.

### முஸ்லிம்களுக்குத் தொண்டாற்றியவர்

ஆசிரியர் திரு. அன்வர் பேசுகையில் "அமரர் ஜி. ஜி முஸ்லிம் மக்களுக்குப் பெருந் தொண்டாற்றியிருக்கிறார் அமரர் ஜி.ஜி முஸ்லிம் மக்களுக்குத் தனிப் பல்கலைக்கழகம் வேண்டுமெனப் பாராளுமன்றத்தில் குரலெழுப்பியதுடன் தேசியக்கொடியில் முஸ்லிம் மக்களுக்குத் தனியிடம் பெற்றுத் தந்தாரென்றும், முஸ்லிம் மாணவர்களின் உயர் கல்விக்கு வழிவகுத்தாரென்றும் கூறினார்

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் பேசுகையில், அமரர் ஜி ஜி இன்று இருந்திருந்தால் தமிழினத்திற்கு இந்த அவலநிலை ஏற்பட்டிருக்காதென்றும் அவரே இன்று தமிழினத்தைச் சரியான பாதையில் வழிநடத்திச் சென்றிருப்பாரென்றும் கூறினார். அமரர் ஜி ஜியின் வழியில்தான் தமிழினம் எதிர்காலத்தில் விமோசனமடையுமென்றும் கூறினார்.

### பிரஜாவுரிமை பெற்றுக்கொடுத்தவர்

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி செயலாளர் திரு. ரி மகேந்திரராசா பேசுகையில் யூ என். பி. அரசு, இந்திய தமிழர்களின் பிரஜா உரிமையையும் வாக்குரிமையையும் பறித்தபின்னர் அமரர் ஜி. ஜி. அரசுடன் பேச்சுவார்த்தை நடாத்தி, பிஜார உரிமை பறிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் பிரஜா உரிமை வழங்க, இந்திய—பாகிஸ்தானியர் பிரஜா உரிமை சட்டத்தை கொண்டுவரச் செய்தார் பிரஜா உரிமை இழந்த இன்றைய அமைச்சர் திரு. தொண்டமானும். திரு. அசீஸும், மீண்டும் பிரஜா உரிமை பெறுவதற்கு வழிவகுத்தவர் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் தான், என்பதை எவரும மறுக்க முடியாது'' என்று கூறினார்.

தமிழ் காங்கிரஸ் வாலிப முன்னணி தலைவர் திரு. ஈ. ஆனந்தராசா பேசுகையில் இந்நாட்டில், கடைசித் தமிழன் இருக்கும் வரை தமிழினத்தின் நெஞ்சிலிருந்து பொன்னம்பலத்தின் நாமத்தை அழிக்கமுடியாதென்றும், அகில இலங்கைத் தமிழ்காங்கிரஸ், வளர்ச்சியைத் தடுக்கமுடியாதென்றும் கூறினார்.

### வாழ்நாளை அர்ப்பணித்தார்

முன்னாள் மாநகரசபை உறுப்பினர் ஜனாப் எம். ஜி. பசிர் பேசுகையில், அமரர் ஜி. ஜி. யிடம் குடிகொண்டிருந்த துணிச்சலும், திறமையும், வல்லமையும் வேறு எந்தத் தலைவரிடமும் இருந்ததில்லையென்று கூறினார். தமிழ் பேசும் இனத்துக்காக அவர் தம் வாழ்நாளை அர்ப்பணித்தாரென்றும், முஸ்லிம்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி அவர்களின் கல்விக்கு வசதி செய்துகொடுத்தாரென்றும் கூறினார்.

ஜனாப் நூர்முகமது பேசுகையில், அமரர் ஜி. ஜியின் வழியில்தான் தமிழ்பேசுமினம் தலைநிமிர்ந்து வாழலாமென்று கூறினார்.

ஜி. ஜி. காங்கிரஸ் தலைவர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசுகையில், அமரர் ஜி. ஜி, உலக அறிஞர்களில் ஒருவராகி விளங்கினாரென்றும், அவரது சட்டத்திறமையைக்கண்டு உலக சட்ட நிபுணர்களே வியந்தார்களென்றும் கூறினார்.

1956ம் ஆண்டு பாராளுமன்றத்தில் தனிச்சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்டபோது, தமிழ்க்காங்கிரஸ் சார்பில் தனிப் பிரதிநிதியாக நின்று அவர் பலமணிநேரம் அச்சட்டத்தை எதிர்த்தாரென்றும் கூறினார்.

முன்னாள் மாநகர சபை உறுப்பினர் திரு ரி. கே இராசரத்தினம் பேசுகையில், தமிழ்க்காங்கிரஸை பலப்படுத்துவதில் இளைஞர் ஈடுபட வேண்டும் என்றார்.

சட்டத்தரணி திரு. உலகநாதன் பேசுகையில் அமரர் ஜி. ஜியின் பேச்சுவன்மையை கேட்டு, உலகத் தலைவர்கள் வியந்தார்களென்றும், அவரை தலைவராகப் பெற்றது தமிழினத்திற்குப் பெருமை என்றும் கூறினார். [க]

---

# தபால் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிப்பு

(கொழும்பு)

இன்று முதல் தபால் கட்டணங்கள் அதிகரிக்கப்படுகின்றன.

இதன்படி ஒரு அவுன்ஸ் நிறைக்குக் குறைந்த சதாரண கடிதத்துக்கான தபால் கட்டணம் 15 சதத்தில் இருந்து 25 சதமாகவும் தபாலட்டைக்கான கட்டணம் 10 சதத்திலிருந்து 15 சதமாகவும் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஒரு இருத்தலுக்குக் குறைந்த நிறையுடைய பார்சல் தபால் கட்டணம் 60 சதத்திலிருந்து ஒரு ரூபாவாகவும் ஒவ்வொரு மேலதிக இருத்தலுக்கு 50 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பார்சல் தபாலில் ஆகக்கூடிய நிறை 22 இருத்தலாகும்.

உள்ளூர் பதிவு செய்யப்பட்ட செய்திப் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கு ஒவ்வொரு 4 அவுன்சுகளுக்கும் 15 சதம் அறவிடப்படும்.

பதிவுத் தபாற் கட்டணம், இன்சூரன்ஸ், எக்ஸ்பிரஸ், தாமதித்தத் தபால் அனுப்புவதற்கு அறவிடப்படும். 'லேட்பீ' ஆகியவற்றில் மாற்றமில்லை. (உ)

---

### பலபரீட்சை நடத்துவதற்காக

# பாண்டிச்சேரி சட்டசபை 24-ம் திகதி மீண்டும் கூடும்

சென்னை, நவ. 9

பாண்டிச்சேரி அமைச்சரவைக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதாகக் கூறப்படுவதை பரீட்சிப்பதற்காக பாண்டிச்சேரி சட்டசபை இம்மாதம் 24ம் திகதி கூடவிருக்கின்றது

இன்று நடைபெற்ற பாண்டிச்சேரி சட்டசபை இதுபற்றி ஆராய்ந்து முடிவெடுத்தது, இம் முடிவு உடனடியாக லெப்டினன்ட் கவர்னருக்கு அறிவிக்கப்பட்டது. 30 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் தமக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதாக முதலமைச்சர் திரு. ராமசாமி கூறிவருகிறார். இக் கூற்றை உள்துறை அமைச்சர் திரு டி ராமச்சந்திரனும் அவரைச் சேர்ந்த அ.இ.அ.தி.மு கழக அதிருப்தியாளர்கள் நால்வரும் எதிர்க் கட்சியினருக்கு ஆட்சேபித்துள்ளனர்.

அரசாங்கத்துக்குள்ள ஆதரவை பரிசீலிப்பதற்காக இரண்டு மாத காலத்தில் இரண்டாவது தடவையாக இப்பொழுது சபை கூட்டப்படவிருக்கிறது.

---

### நீரில் மிதந்த மர்மடின்

# கைக்குண்டு வெடித்து கணவன்-மனைவி காயம்

[பண்டத்தரிப்பு]

வெள்ளத்தில் மிதந்துவந்த தகரடின் ஒன்றில் இருந்த கைக்குண்டு வெடித்ததால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். இக்குண்டுவெடிப்பால் அவரது ஒரு கை துண்டிக்கப்பட்டதுடன் ஒரு கண்ணையும் இழந்தார் இவரது மனைவியும் காயமடைந்துள்ளார்

அளவெட்டியில் நடைபெற்றுள்ள இச்சம்பவம்பற்றி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி. சுகுனேந்திரன் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவருவதாவது:

''சம்பவதினம் ஒழுங்கை ஒன்றின் ஊடாக வெள்ளத்தில் மிதந்துவந்ததாம் ஒரு ரின். செல்லையா என்பவர் இந்த ரின்னை எடுத்துச்சென்று மனைவி அருகில் இருக்கக்கூடியதாகத் திறந்து பார்த்தாராம்.

மறுகணம் பயங்கர சப்தத்துடன் அதனுள் இருந்த கைக்குண்டு வெடித்து கரும் புகை கிளம்பியதாம். படுகாயமடைந்த கணவனும் மனைவியும் உடன் யாழ். பெரியாஸ்பத்திரிக்கு விரையப்பட்டனர். கணவனது ஒரு கரமும் ஒரு கண்ணும் பறிபோயிற்று.

சம்பவதினம் பற்றித் தகவல் கிடைத்ததும் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பி. சகுணேந்திரன் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணை நடத்தினார்.

புலன்விசாரணைகள் தொடர்கின்றன. (உ)

---

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

'லண்டன் முரசு' ஆசிரியர் திரு. க. ஞானசூரியன், இம்மாதம் 12ந் திகதி மாலை கைதடி சைவ அநாதை இல்லத்தில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

---

### கிளிவெட்டி கொலை:

## தங்கத்துரைக்கு நிபந்தனையுடன் பிணை

(கொழும்பு)

மூதூர் முன்னாள் எம். பி. திரு ஏ. தங்கத்துரையை பிணையில விடுதலை செய்யுமாறு அப்பீல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அப்பீல் நீதிமன்ற நீதியரசர்கள் திரு. பேர்ஸி கொலின் தோமி, திரு. எச் ரெட்றிக்கோ ஆகியோர் இந்த உத்தரவைப் பிறப்பித்தனர்.

திரு. தங்கத்துரையை 2000 ரூபா உறுதிப் பிணையில் விடுதலை செய்யுமாறும், இரு வாரங்களுக்கு ஒருமுறை ஞாயிற்றுக்கிழமை மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி முன் திரு. தங்கத்துரை ஆஜராகி ஒப்பமிட வேண்டுமென்றும் நீதியரசர் உத்தரவிட்டுள்ளனர்.

கிளிவெட்டியில் அப்புகாமி என்பவரின் கொலை தொடர்பாக இவர் சந்தேகத்தின் பேரில் 6 மாதங்களுக்கு மேலாக றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். (உ)

---

## ஜனாதிபதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு முன்பதாக திரு. ஜயவர்தன மாமல்லபுரத்துக்குச் சென்று புராதன கலைச் செல்வங்களைக்கண்டு மகிழ்ந்து திரும்பினார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 869, Registered as a Newspaper in SriLanka